00030

# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

## அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு

## இலங்கை நிருவாக சேவை அதிகாரிகளுக்கான 1வது தடைதாண்டல் பரீட்சை (2015/i)

## (04) அரச துறையில் நிதி முகாமைத்துவமும் பெறுகை செயன்முறையும்

**காலம் : 3 மணித்தியாலம்**

**வினா இல 01 முதல் 05 வரையிலான வினாக்களில் இருந்து 04 வினாக்களையும்,வினா இல 06 மற்றும் 07 இருந்து ஒரு வினாவையும் தெரிந்து விடை தருக.**

---

1. அரச நிதி முகாமை தொடர்பாக அரசியலமைப்பு சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகள் யாவை?சுருக்கமாக விளக்குக. (20 புள்ளிகள்)

2. அ). அரசின் அனைத்து வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் தொடர்பாக நிதி அமைச்சர் வகை கூறல் வேண்டும். அவர் அவ்வாறு பொறுப்புக் கூறுவதற்கு பின்பற்றும் செயன்முறையினை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ). அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், பகுதியளவிலான அரச நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் யாவை? சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

இ). மேலே கூறப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதா? உமது கருத்துக்களை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

3. அ). அரச வருமானங்கள், மீண்டுவரும் செலவீனங்கள், மூலதனச் செலவீனங்கள் மற்றும் முற்பணக்கணக்குகள் தொடர்பான மதிப்பீடுகளை தயாரிக்கும் பொறுப்புக்கள் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன? சுருக்கமாகக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

ஆ). ஏதேனுமொரு கருத்திட்டத்தின் மொத்தச் செலவு அதன் ஓதுக்கீட்டினை விட அதிகமாக காணப்படக்கூடிய சந்தர்ப்பத்தில் அதன் மொத்த செலவினை அதிகரிப்பதற்கு நி.பி 72 அடிப்படையில் அதிகாரத்தினைப் (அனுமதியினைப்) பெற்றுக் கொள்ளல் வேண்டும். நி.பி 72 அடிப்படையில் அதிகாரம் வழங்குவதற்கு உரியவர்களையும் அவற்றின் அதிகார எல்லைகளையும் சுருக்கமாக விளக்குக

(10 புள்ளிகள்)